சுருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – 2019–20–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 81 புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல் மற்றும் உதவிப் பேராசிரியர் பணியிடங்களை தோற்றுவித்தல் – ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

**உயர்கல்வி (ஜி1) துறை**

அரசாணை (நிலை) எண்.204

நாள் 14.08.2019.
விகாரி வருடம், ஆடி–29,
திருவள்ளுவர் ஆண்டு, 2050.

படிக்கப்பட்டவை:–

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.21020/க்யூ3/2018, நாள்12.07.2019

---------

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 02.07.2019 அன்று மற்றவற்றிற்கிடையே கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்க மாணாக்கர்கள் அதிக ஆர்வம் காட்டுவதால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் புதியதாக 81 பாடப்பிரிவுகள் 2019–20 ஆம் ஆண்டு தொடங்கப்படும்."

2. அதற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் புதிய பாடப்பிரிவுகள் மற்றும் அதற்கான பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்த கருத்துருவினை கல்லூரிக் கல்வி இயக்குநர் பின்வருமாறு அனுப்பி வைத்துள்ளார்:-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துருக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 45 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2019–20–ஆம் கல்வியாண்டில் 69 இளநிலை மற்றும் 12 முதுநிலை ஆக மொத்தம் 81 புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு 2019–20ஆம் கல்வியாண்டிற்கு 167 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும், 2020–21ஆம் கல்வியாண்டிற்கு 145 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும், 2021–22ஆம் கல்வியாண்டிற்கு 138 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும் புதியதாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும், அப்பாடப்பிரிவுகளை கையாள முதலாமாண்டிற்கு (2019–20) 167 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.13,65,20,496/– (ரூபாய் பதிமூன்று கோடியே அறுபத்தைந்து இலட்சத்து இருபதாயிரத்து நானூற்று தொண்ணூற்றாறு மட்டும்) முதலாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் என்றும், இரண்டாமாண்டிற்கு (2020–21) 145 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக

....2

ரூ.11,85,35,760/- (ரூபாய் பதினொரு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து எழுநூற்று அறுபது மட்டும்) இரண்டாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் என்றும், மூன்றாமாண்டிற்கு (2021-22) 138 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.11,28,13,344/- (ரூபாய் பதினொரு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூற்று நாற்பத்து நான்கு மட்டும்) மூன்றாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் என்றும், இப்புதிய பாடப்பிரிவுகள் துவங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்கென உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று 2019-20 ஆம் கல்வியாண்டிலிருந்து இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 45 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 69 இளங்கலை, 12 முதுகலை, ஆகமொத்தம் 81 புதிய பாடப்பிரிவுகளை துவங்குவதற்கு அனுமதி அளித்தும், இப்பாடப்பிரிவுகளை கையாளுவதற்கு முதலாமாண்டிற்கு 167 உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் குறைந்தபட்ச ஊதியம் ரூ.57700 (நிலை-24-ரூ.57700-182400) ஒப்பளிப்பு செய்தும், அதற்கான முதலாமாண்டிற்கான செலவினமாக ரூ,13,65,20,496/- நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும் 2020-21, 2021-22 ஆண்டுகளுக்கு முறையே தேவைப்படும் 145 மற்றும் 138 உதவிப் பேராசியர் பணியிடங்களை தோற்றுவிப்பதற்கு அந்தந்த ஆண்டுகளில் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேற்படி செலவினங்கள் பின்வரும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேணடும்.

(i) <u>ஆடவர் கல்லூரி</u>

"2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் –103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள்–AA கலைக்கல்லூரிகள் (ஆடவர்) – 301 சம்பளங்கள்" (து.தொ.கு.2202 – 03 – 103 AA –0109) (IFHRMS : 2202 – 03 – 103 – AA – 30101)

(ii) <u>மகளிர் கல்லூரி</u>

"2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் –103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள்– AB கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 301 சம்பளங்கள்" (து.தொ.கு.2202 – 03 – 103 AB –0107) (IFHRMS : 2202 – 03 – 103 – AB – 30101)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், 2019-20ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள

கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இச்செலவினத்தை 2019-2020 திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித் (கல்வி-I) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் கோப்புஎண்.2DS(AR)/கல்வி-I/2019, நாள்.14.08.2019,அ.சா.எண்.41232/மை.ம.ஆ.பி/2019, நாள்.14.08.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1157 (ஆயிரத்து நூற்று ஐம்பத்து ஏழு) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக்கல்வி இணை
இயக்குநர்கள் (கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
சார்ந்த கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை-1/35/15.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை-15.
சார்ந்த கருவூல அலுவலர்.

நகல்:-
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை,
சென்னை-9.
நிதித் (கல்வி-I / வ.செ.பொது-I / வ.செ.பொது-II / சி.எம்.பி.சி.) துறை,
சென்னை-9.
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

கி. சுரேஷ் குமார் 14/8/19
பிரிவு அலுவலர்